Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 27

வெள்ளிக்கிழமை 23 டிசெம்பர் 2022

மார்கழி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

## கோத்தாபய ராஜபக்சவிடம் விசாரணை நடத்தத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 23
சீனி தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதமாகக் குறைத்து இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக்கவேண்டிய ஆயிரத்து 600 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரி வருமானத்தை இழக்கச்செய்து பெரும் இழப்பை ஏற்படுத்தியமைக்காக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு »11

கோத்தாபய உருவாக்கிய

## தொல்பொருள் செயலணி ஜனாதிபதியால் கலைப்பு

கொழும்பு, டிசெ. 23
கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணி, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கலைக்கப்பட்டது.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ஒருவர் சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கு »11

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு: வரவேற்கிறார் கோத்தாபய



கொழும்பு, டிசெம்பர் 23
அரசியல்தீர்வைக் காணும் நோக்குடன் தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சர்வகட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ள பேச்சை வரவேற்கின்றேன் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். »11

## அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்!

கொழும்பு, டிசெ. 23
உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், சகல நிர்வாக மாவட்டங்களுக்கான தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். »11

## மீனவரின் கழுத்தில் கத்திவைத்து இராணுவத்தினர் நேற்று மிரட்டல்!

காரைநகரில் பயங்கரச் செயல்

யாழ்ப்பாணம், டிசெ. 23
காரைநகர், சாம்பலோடையை அண்டிய கடற்கரையோரத்தில் உலர்மீன் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளியின் கழுத்தில், இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவர் கத்திவைத்து மிரட்டியுள்ளார். »11

கிளிநொச்சியில்

## சிக்கியது சிறுத்தை!



கிளிநொச்சி, டிசெ. 23
கிளிநொச்சி, பூநகரி-வேரவில் பகுதியில் தனியார் ஒருவரின் தோட்டத்தில் வேட்டைக்காக வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய சிறுத்தை வன உயிரிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளது.
தோட்டத்துக்கு வரும் பன்றி, முயல் போன்ற விலங்குகளுக்காக »11

## மனநலக் காப்பகம் வடக்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடமாகாண சுகாதார அமைச்சின்கீழ், தனியான பிரிவாக மனநல மேம்பாட்டுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் இந்தப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.
குறித்த பிரிவானது போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை வழிப்படுத்தல், »11

## காணாமற்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணம்,பலாலி , அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் காணாமற்போயிருந்த நிலையில், அவர் நேற்றையதினம் சடலமாக மீட்கப்பட்டார். ராயப்பு றொபேட் கெனடி (வயது - 54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
கடந்த 20ஆம் திகதி குறித்த மீனவர் காணாமற்போயிருந்தார். இதையடுத்து அவரைத் »11

## போலி மருத்துவர்களால் கால்நடைகள் உயிரிழப்பு

வடக்கு மக்களே அவதானம்!

கிளிநொச்சி, டிசெ. 23
கால்நடைகளுக்கு அரச மருத்துவர்கள் என்ற போர்வையில் சட்டவிரோதமான முறையில் போலிச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு பெருமளவு நிதி அறவிடப்படுகின்றது. இவ்வாறான போலி மருத்துவர்கள் குறித்து மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் - இவ்வாறு வடக்கு மாகாண »11

## டிசெம்பர் 26 அரச விடுமுறை

கொழும்பு, டிசெ. 23
கிறிஸ்மஸுக்கு மறுநாளான டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் »11

கொழும்பில்

## யாழ். இளைஞர் சடலமாக மீட்பு!

கொழும்பு, டிசெ. 23
யாழ்ப்பாணம் - சிறுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கணேஸ் துஜீவன் (வயது - 23) என்ற இளைஞரே »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற்செய்கையாளர்களுக்கு நன்கொடை வழங்கும் அரசு

கொழும்பு, டிசெ.23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இந்த முறை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் அதிகபட்சமாக 20 ஆயிரம் ரூபாவரை பண உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் கொடுப்பனவு மீள அறவிடப்பட மாட்டாது என்பதுடன் முற்றிலும் நன்கொடை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு ஹெக்ரெயர் அல்லது அதற்குக் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான நெல் விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும், ஒரு ஹெக்ரெயரிலும் அதிக நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இந்தப் பண உதவி வழங்கப்படும் என்றும், இந்த நிதி நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமுறை 8 இலட்சம் ஹெக்ரெயர் வயல் பரப்பில் பெரும்போகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கு அவசியமான உரத்தை கொள்வனவு செய்வதற்காகவே விவசாயிகளுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இதற்காக 8 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்றும், நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (ஏ-இ)

# டெங்குத் தாக்கம் மீண்டும் உயர்வு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 23

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதுவரையில் 58 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் அதிக ஆபத்தான வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 72 ஆயிரத்து 903 டெங்குநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த வருடத்தில் இந்தக் காலப் பகுதியில் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் இந்த வருடத்தில் 40 ஆயிரத்து 998 நோயாளர்கள் அதிகமாகப் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அந்தந்தப் பிரிவுகளில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை ஒழிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை கண்டறிந்து அவற்றை அப்புறப்படுத்தி மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# விபத்துகளில் 1,971 பேர் பலி

கொழும்பு, டிசெ.23

நாடளாவிய ரீதியாக இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்கள் காரணமாக ஆயிரத்து 971 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்தின் கல்வி மற்றும் பொது பாதுகாப்பு நிலைய கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் சேனக கமகே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நாளாந்தம் வாகன விபத்துக்கள் காரணமாக குறைந்தது 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், அவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# அரச ஊழியர்களின் போனஸிலும் "கட்"

கொழும்பு, டிசெ.23

அரசாங்க ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறை நாள்களுக்கான கொடுப்பனவு மற்றும் போனஸ் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பில் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்த்தனவின் கையொப்பத்துடன் இந்த சுற்றறிக்கைகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளன.

அரச ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகபட்ச வரம்பாக 25 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டு பணம் வழங்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கு போனஸ் கொடுப்பனவுகளை வழங்க வேண்டாம் என திறைசேரி அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (ஏ-இ)



# உலகத் தமிழிலக்கிய விழா மதுரையில் கோலாகலம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு உலகத்தமிழ் சங்கம் மதுரையும் இணைந்து நடத்தும் உலகத் தமிழ் இலக்கிய விழா நேற்று வியாழக்கிழமை மதுரையில் ஆரம்பமாகியது.

'தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழரின் பங்களிப்பு' என்ற பொருளில் அமைந்த இந்த சர்வதேச கருத்தரங்கத்தின் தொடக்க அமர்வு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

தொடக்க அமர்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் ப. அன்புச்செழியனிடம் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க வெளியீடான 'சங்கப்பேழை' என்ற இதழ் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 4 ஆய்வு அரங்குகள் இடம்பெற்றன. கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி தலைமையில் கவியரங்கம் மாலை வேளை இடம்பெற்றது.

அதேவேளை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் நிறைவு நிகழ்வில் நான்கு அமர்வுகளாக ஆய்வரங்கு இடம்பெறுவதோடு பட்டிமன்றம் ராஜா தலைமையில் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பேராசிரியர் சண்முகதாஸ் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கவிஞர் கு.றஜீவன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் இந்தியாவின் நூற்றுக்கணக்கான ஆய்வு மாணவர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (ச)

# இ.போ.ச. மீது கல்லெறி பொலிஸார் விசாரணை



யாழ்ப்பாணம், டிசெ. 23

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டி பகுதியில் இ.போ.ச பேருந்தின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் மன்னாரிலிருந்து யாழ்.நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான குறித்த பேருந்தின் முன்பக்க கண்ணாடி மீது யாழில் இருந்து பூநகரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமொன்றிலிருந்தோர் கல்வீச்சு தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய தாக்குதல் நடத்திவிட்டு டிப்பர் ரக வாகனத்தில் தப்பிச் சென்றவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு

நத்தார் தினத்தை முன்னிட்டு கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தல் ஆராதனைகள் நடைபெறவுள்ள நிலையில், தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் உள்ள அருட்தந்தைகளை சந்தித்து, கலந்துரையாடல்களை நடத்தி, அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் அனைத்துப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

நத்தார் காலப் பகுதியில் தேவாலயங்களில் உள்ளவர்களின் ஒத்துழைப்புடன், தேவாலயத்துக்கு வரும் சந்தேகத்துக்கு இடமானோரை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மீட்கப்பட்ட மியான்மர் அகதிகள் யாழிலிருந்து நீர்கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணியை அண்மித்த கடற்பரப்பில் கடந்தவாரம் மீட்கப்பட்ட மியான்மர் அகதிகள் நேற்று வியாழக்கிழமை 3 பேருந்துகளில் யாழிலிருந்து நீர்கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

பங்களாதேஷிலிருந்து படகுமூலம் 104 மியான்மர் அகதிகள் இந்தோனேஷியா நோக்கி சென்றபோது படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த சனிக்கிழமை இலங்கைக் கடற்பரப்பு வெற் றிலைக்கேணியை அண்மித்த கடற்பகுதியில் தத்த ளித்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டனர். அவர்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் தங்கவைத்து உணவு மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காங்கேசன்துறைப் பொலி ஸார் உரிய ஏற்பாடுகளின்றி இரு பேருந்துகளில் குறித்த அகதிகளை நீர்கொழும்புக்கு அனுப்ப முற் பட்டநிலையில் உயர் மட்டத் தலையீட்டால் யாழ். சிறைச்சாலையில் அவர்கள் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்தநிலையில் வட மாகாண அமைச்சுகளின் 3 பேருந்துகள் மூலம் மியான்மர் அகதிகள் பாதுகாப் பாக நேற்று வியாழக்கிழமை நீர்கொழும்பிலுள்ள அகதிமுகாமுக்கு மாற்றப்பட்டனர். (ச-27)



யாழ்ப்பாணம் - மருதனார்மடம் அருள்வளர் ஆஞ்சநேயர் ஆலய தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள்பாலித்தனர். (ச)

# காலாவதியான உரவகை, மருந்துகள் விற்போருக்கு எதிராக நடவடிக்கை

### வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23



இலங்கை பீடைநாசினி 1980 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ், தடை செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள், போலியான மற்றும் காலாவதியான மருந்துகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாடு உட்பட வடமாகா ணத்தில் அரசால் தடை செய்யப் பட்ட விற்பனைக்கு அனுமதி வழங் கப்படாத போலி பீடைநாசினிகள், பங்கசு நாசினிகள் மற்றும் திரவப் பசளைகள் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக் கப்பட்டுள்ளன.

தடைசெய்யப்பட்ட மற்றும் போலி விவ சாய இரசாயனங்களை விவசாயிகள் பயன்படுத்துவதால் நெற்பயிர்ச் செய்கை உட்பட ஏனைய பயிர்ச் செய்கையில் நட்டம் ஏற்படுவதுடன் சுற்றுச்சூழலும் பாதிப்படைகிறது.

தற்போது நெற்செய்கை இடம் பெறும் நிலையில் விவசாயிக ளுக்கு காலாவதியான மருந்து களை சில வர்த்தகர்கள் பற்றுச்சீட்டு இன்றி விற்பனை செய்வதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான விவசாய இரசாயன விற்பனையில் ஈடுபடும் விற்பனை யாளருக்கு எதிராக இலங்கை பீடை நாசினி 1980 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-14,27)



## மரம் சரிந்து வீழ்ந்ததில் பாடசாலை கட்டடம் சேதம்

வவுனியா, டிசெ. 23

மழையுடன் வீசிய கடும் காற்றால் வவுனியா தாண் டிக்குளம் பிரமண்டு வித்தியாலய கட்டடத்தின் மீது நேற்றுமுன்தினம் புதன்கிழமை பெரிய மரமொன்று சரிந்து வீழ்ந்துள்ளது.


இதனால் பாடசாலைக் கட்டடத்தின் கூரைகள் பகுதி யளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் குறித்த பாதையூடாக போக்குவரத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தநிலையில் மரத்தை அகற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர். (ச-18)

## கொடுப்பனவுகளை இன்று பெற்றுக் கொள்ளுங்கள்

சாவகச்சேரி, டிசெ. 23

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகின் வலுவூட்டல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கொடுப் பனவுகளும் , உலக உணவுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நான்கு அங்கத்தவர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவுகளும் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்பட்டு வரு கின்றன.

வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்தப்படவுள்ள தால் கொடுப்பனவுகளை இன்று வெள்ளிக்கிழமை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)



## ரூ. 500 முதல் ரூ. 800 வரையில் சவுக்கு மரக்கிளை விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ. 23

சவுக்கு மரக்கிளைகள் ரூ. 500 முதல் ரூ. 800 வரையில் விற்பனை செய்யப்படுகின்றன என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட பண்டிகைகளை முன் னிட்டு சவுக்கு மரக்கிளைகளை அதிக மக்கள் கொள் வனவு செய்கின்றனர்.

யாழ்.நாகர்கோவில் மற்றும் மணற்காடு ஆகிய பகுதி களில் சவுக்கு மரக்கிளைகளின் வியாபாரம் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன் யாழ். மரியன்னை தேவாலயத்துக்கு அரு காமையில் உள்ள பிரதான வீதிகளிலும், புனித பற் றிக்ஸ் கல்லூரி அருகாமையிலும் சவுக்கு மரக்கிளை கள் கூடுதலாக விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-14,27)

## கிராமஅலுவலர் அலுவலகத்தில் ஆவணங்கள் தீக்கிரை

யாழ்ப்பாணம், டிசெ. 23

தெல்லிப்பழைப் பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கட்டுவன் மேற்கு ஜே/239 கிராம அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த சில ஆவணங்கள் விஷமிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப் பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை தெல் லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை இரண்டு வருடங்களுக்கு முன் குறித்த கிராமஅலுவலரின் வீடு விஷமிகளால் சேதமாக்கப்பட்ட டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14,23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

## திரு. தே.வைகுந்தன்

(பிராந்திய முகாமையாளர் தென்னை பயிர்ச்செய்கை சபை)

(23.12.2022)



அரச பணிதனில் அயராத
சேவையாளனே மக்கள்
இடர் தீர்க்கும் மகத்தான
பண்பாளனே
பொன்விழா காணும்
இனிய இன் நன்நாளில்
என்றும் நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: கற்பகதரு சங்கங்களும், மக்களும் முல்லைத்தீவு



# 50வது பிறந்தநாள் வாழ்த்து



## தேவராஜா வைகுந்தன்

(பிராந்திய முகாமையாளர் தென்னை பயிர்ச்செய்கை சபை யாழ்ப்பாணம்.)

Congratulations

50th Birthday

வாழ்க்கை என்ற கடலில்
மகிழ்ச்சி என்ற படகில்
வாழ்நாளெல்லாம்பவனி வந்து
வளம் பல பெற்றுவாழ்க நீடூழி
வளர்க வையகத்தில் நின்புகழ்.

வாழுத்துவோர்...

கண்டாவளை வலய கற்பகதரு சங்கங்கள்.




### பிள்ளையார் கதை

இருத்தொரு நாள்நோன்பை இனிதுறவே நிறைசெய்துன்
அருளமுதை இரக்கின்றோம் கணநாதா- உன்றனது
கருணைமழை பொழிந்தெம்மைக் காப்பாற்ற நீமறந்தால் (மறுத்தால்)
காப்பதற்கு யார்தான் உளர்

-முருகு

# 'புத்திகெட்ட மனிதரெல்லாம்' ராஜாவில் இலவசக் காட்சி

*யாழ்ப்பாணம், டிசெ. 23*

ஈழசினிமா வரலாற்றில் மாபெரும் வரலாற்று வெற்றிபெற்ற 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படத்தின் ஓராண்டு வெற்றிக் கொண்டாட்டம் யாழில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண இளைஞர்களின் உருவாக்கத்தில் வெளியாகி வெற்றிபெற்ற இந்தத் திரைப்படத்தின் ஓராண்டு பூர்த்தியை மக்களோடு மக்களாக கொண்டாட படக்குழுவினர் முன்வந்துள்ளனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் நாளை சனிக்கிழமை 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இந்தத் திரைப்படம் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளது என படக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ச-19)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** தீய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை. திருமால் வழிபாடு நலம் சேர்க்கும்..

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில்தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பண உதவி செய்வார்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படும்.

# 2023 புத்தாண்டு ராசிபலன்



மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.



## இடபம்

நீதிக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டவர் நீங்கள். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் 9ஆம் வீட்டில் வலுவாக நிற்கும் நேரத்தில் 2023 புத்தாண்டு பிறக்கிறது. இதுவரை உங்களிடமிருந்த வெறுப்பு, விரக்தி எல்லாம் விலகும்.

வருமானம் உயரும். வீடு கட்டும் முயற்சிக்கு பல வழிகளிலும் உதவிகள் கிடைக்கும். புதன் 8ல் மறைந்திருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால், செல்வாக்கு கூடும். எனினும், ராசிக்கு 12ல் புத்தாண்டு பிறப்பதால், தவிர்க்க முடியாத செலவுகளும் பயணங்களும் வந்துகொண்டேயிருக்கும். 22.04.2023 வரை குரு லாப வீட்டில் வலுவாகக் காணப்படுவதால் திடீர் பண வரவு உண்டு. நீண்டநாளாக எதிர்பார்த்த பணம் வந்து சேரும். மூத்த சகோதரர் உதவ முன் வருவார். பெரிய பதவிகள் தேடி வரும்.

23.04.2023 முதல் வருடம் முடியும் வரை குரு 12ஆம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள், சுபச் செலவுகள் அதிகரிக்கும். வேலைப்பளுவும் கூடும்

இந்தாண்டு தொடக்கத்தில் சனிபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டில் தொடர்வதால், அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தந்தையின் உடல் நிலை பாதிக்கும். 29.03.2023 முதல் 23.08.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 10ஆம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், உத்தியோகத்தில் பணிச் சுமை, மறைமுக எதிர்ப்பு, ஏமாற்றம் வந்துபோகும்.

08.10.2023 வரையிலும் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் கேது பகவான் நிற்பதால், உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். 09.10.2023 முதல் வருடம் முடியும் வரை, கேது 5ஆம் வீட்டில் அமர்வதால் பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தாமதமாக முடியும். இந்தப் புத்தாண்டு தொடங்கும்போது குருபகவான் லாப வீட்டில் நிற்பதால் உங்களின் புகழ், கௌரவம் உயரும். கணவரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, முற்பகுதியில் அதிரடி வளர்ச்சியையும்; நிறைவில் கொஞ்சம் அலைச்சலையும் தருவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழர் பிரச்சினையும் தனிநபர் கையாள்கையும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கக் குழுவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றிருந்தது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் மிகக்காட்டமான விமர்சனத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் முன்வைத்திருக்கின்றார். 'சுமந்திரன் இதுவரையில் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை, வடக்கு – கிழக்கு மாகாண மக்களின் மனோநிலையை பிரதிபலிப்பது போன்று கூறவில்லை. கொழும்பில் இருப்பவர்கள் போன்றே கதைத்து வருகிறார். உதாரணத்துக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அரசமைப்பு வரைவை தயாரித்தார்கள். அதில், ஏக்கிய (ஒற்றையாட்சி) என்று குறிப்பிடப்பட்டி ருந்தது. சுமந்திரன் 'ஏக்கியவை' ஏற்றுக்கொண்டுள்ளார். அதை நாம் ஏற்க முடியாது என்று அப்போதே கூறினோம். இவ்வாறான முக்கியமான – அடிப்படை – விடயங்களில் பலவிதமான மாற்றங்கள் – முரண்பாடுகள் எங்களுக்குள் இருக்கின்றன' என்று விக்கினேஸ்வரன் குறிப்பிட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஜனாதிபதி ரணிலுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்பட்ட முறைமை தொடர்பிலும் விக்கினேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்புக்கு ஜனாதிபதி செயலகத்தாலேயே கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்புக்கான அழைப்பு சுமந்திரன் ஊடாகவே விக்கினேஸ்வரனுக்கும் சரி, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த அழைப்பினூடாக அரசாங்கம் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறது. அதாவது தமிழர்களின் பிரச்சினையை தமக்கு இசைவான தனிநபர் மூலமாக அணுகுதல் என்பதே அந்தச் செய்தி. தமிழர் தரப்புக்குள் பிளவை உண்டுபண்ண ரணில் இதுபோன்ற பல நரிவிளையாட்டுக்களைச் செய்ய முற்படுவார் என்பது எல்லோரும் ஏற்கனவே எதிர்வு கூறிய விடயமே. சர்வகட்சி பேச்சுக்கு முன்னரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் சுமந்திரனுடன் மாத்திரம் சந்திப்பு நடத்தியிருந்தனர். இப்போது இரண்டாம் கட்டப் பேச்சுக்கும் சுமந்திரன் ஊடாகவே தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பை அனுப்பியதன் மூலம் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் வெட்டவெளிச்சமாகியுள்ளது. இவ்வாறு ஒரு தனிநபர் ஊடாக அரசாங்கம் அழைப்பை அனுப்பியதாலேயே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சினை தமிழ்க் கட்சிகள் புறக்கணித்திருந்தன. அதனையே நாடாளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரனின் எதிர்வினையும் உறுதிப்படுத்துகின்றது. இதனைத்தான் ரணிலும் எதிர்பார்த்திருப்பார்.


ஓர் இனத்தின் பிரச்சினையை தனிநபர் ஊடான பேச்சின் மூலம் கையாள அரசாங்கம் முற்படுகின்றது. ரணிலின் இந்தச் சதித்திட்டம் தமிழரசுக் கட்சிக்கோ சுமந்திரனுக்கோ தெரியாததுமல்ல. அப்படித் தெரிந்திருந்தும் கூட, எதற்காக ரணில் இழுத்த இழுப்புக்கெல்லாம் சுமந்திரன் செயற்படுகின்றார் என்பது புரியவில்லை. சகல தமிழ்க் கட்சிகளும் இந்தச் சந்திப்பில் பங்குபற்ற வேண்டும் , அதனூடாகவே இனப்பிரச்சினைக்கான பொருத்தமான தீர்வினை அடையமுடியும் என்ற எண்ணம் ஆத்மார்த்தமாகவே சுமந்திரனுக்கு இருக்குமானால் அவர் என்ன செய்திருக்க வேண்டும்? ஏனைய கட்சிகளுக்கு அழைப்பை விடுக்குபடி ரணில் கூறியதும், அதை மறுதலித்து, நேரடியாகவே அரசாங்கத் தரப்பே அழைக்க வேண்டும் என்பதை வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக கூறியிருக்க வேண்டும். அதைவிடுத்து அரசதரப்பு பிரதிநிதி போல , ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு ரணில் சார்பில் அழைப்பு விடுத்தமையை ஏனைய தமிழ்க் கட்சிகள் மாத்திரமல்ல, தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏற்கனவே தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் 'ரணிலின் ஆள் தான் சுமந்திரன்' என்ற சந்தேகம் அதிகமாக உண்டு. எனவே அந்தச் சந்தேகத்தை இல்லாமல் செய்யத்தான் சுமந்திரன் முயற்சிக்கவேண்டுமே தவிர, மீண்டும் மீண்டும் அந்தச் சந்தேகத்தை வலிதாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால், ரணிலின் தந்திரமே இறுதியில் வென்றுவிடும் அபாயமுண்டு.

அவ்வாறில்லாமல், உண்மையாகவே ரணிலும் சுமந்திரனும் கூட்டுச்சேர்ந்து தமிழ்மக்களின் பிரச்சினை நீர்த்துப் போவதற்கான சதியில் இறங்கியிருக்கிறார்கள் என்றால், இந்தச் சதியை முறியடிக்கும் மாற்று வியூகங்களை தமிழ்க்கட்சிகள் உடனடியாக வகுக்கவேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தனி ஒருவரின் ஊடாகக் கையாள முற்படும் ரணிலின் நடவடிக்கைகளை எதிர்ப்பது மாத்திரமல்லாது, அந்த எதிர்ப்பின் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கையும் பாதிக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ளவும்வேண்டும். கத்தியில் நடப்பதைப்போன்ற இந்த நகர்வை முன்னெடுத்தாலே தமிழ்த் தேசியக் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுத்தருவதற்கான சாத்தியங்கள் உண்டாகலாம். இல்லாவிடில் ஏமாற்றமே தொடர்கதையாகக் கூடும்.

நாளொரு நல்வார்த்தை

"ஒளி மயமான மலர்கள்... இருளான வேர்களில் இருந்து தான் மலர்கின்றன...!"

– ஓஷோ




# அரசியல் தீர்வுக்கான பேச்சில் மத்தியஸ்தராக செயற்படேன்!

## சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கையில் அரசாங்கத்துக்கும், தமிழ் கட்சிகளுக்கும் இடையே மத்தியஸ்தராகச் செயற்படப் போவதில்லை என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

எரிக்சொல்ஹெய்ம் தமிழ் அரசியல் கட்சிகளுடனும், எதிர்க்கட்சித் தலைவருடனும் இந்த வாரம் சந்திப்புக்களை முன்னெடுத்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம், இந்தச் சந்திப்புக்கள் சூழல்சார்ந்த விடயங்கள் தொடர்பாகவே அமைந்திருந்தன என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் காலநிலை விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள சொல்ஹெய்ம் காலநிலை மற்றும் சூழல் விவகாரங்கள் தவிர தனக்கு வேறு ஆணையில்லை என குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ஆரம்பித்துள்ள சர்வ கட்சி பேச்சுவார்த்தைகளில் வெளிநாட்டவருக்கு இடமில்லை எனக் கருதுகின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார். (ஏ-இ)

# வட்டாரக் குறைப்புக்கு கட்சிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.23

உள்ளூராட்சி வட்டாரங்களைக் குறைக்கும் வகையில் அவற்றை ஒன்றிணைக்கும் திட்டத்தை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக நிராகரித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்தத் திட்டம் கூட்டாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாகத் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ள கட்சித் தலைவர்கள், எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படுகின்றபோது, பல்லின சமூகம் வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்கள் பாதிக்கப்படும் வகையில் அல்லது அவர்களது பிரதிநிதித்துவம் திட்டமிட்டுக் குறைக்கப்படும் வகையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படக்கூடாது என்று வலியுறுத்தினர்.

பிரதேசங்களில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் திட்டமிட்டுக் குறைக்கப்படும்வகையில் வட்டார எல்லை நிர்ணயம் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொது அமைப்புக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

எல்லை நிர்ணயங்கள் வெளிப்படைத் தன்மையுடனும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களினது கருத்துக்களைப் பெற்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தனியே அதிகாரிகள் மட்டும் அவற்றைத் தீர்மானிக்க முடியாது என்றும் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஏ-214)

**நாளை**
24.12.2022
சனிக்கிழமை
மார்கழி 09

சுபநேரம் : 03.26 – 04.56
ராகுகாலம் : 09.26 – 10.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரகலய' போராட்ட எழுச்சி வன்முறையால் தோற்றது!

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 23

'அரகலய' போராட்டத்தின் எதிரொலியாக, அரசியல் ரீதியில் அற்புதமான மாற்றமொன்றை ஏற்படுத்தக் கிடைத்திருந்த மிக அழகிய சந்தர்ப்பத்தை பொறுப்பில்லாத முன்னெடுப்புகளால் நாசமாக்கி விட்டார்கள். இது இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்குக் கிடைத்த மாபெரும் அவமானமிக்க படுதோல்வி யாகும் – இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவ ராசா.



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கொரோனாப் பெருந்தொற்றுக் கால நாட்டின் முடக்க நிலை ஏற்ப டுத்திய பொருளாதார வீழ்ச்சி, அதனைத் தொடர்ந்து முன்னெடுக் கப்பட்ட பிழையான அரசியல் முடி வுகள் தாக்கம் செலுத்திய பொரு ளாதாரக் கொள்கை காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமை இவற்றால் மக்கள் தாம் தெரி வுசெய்த அரசாங்கத்துக்கு எதிராக குறுகிய காலத்தில் வீதிக்கு வந்த னர்.

மக்கள் பிரச்சினைகள் தொடர்ந் தும் சிக்கல் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சந்தர்ப் பத்தை 'அரகலய' என்ற பெயரில் இளைஞர்களை முன்னிறுத்தி நிறுவன மயப்படுத்தியபோது அவர் களது குரலை மக்கள் தமது குரலா கக் கண்டார்கள். அதனாலேயே மக்கள் ஆதரவு போராட்டக்காரர்க ளுக்குக் கிடைத்தது.

'வரிசை யுகம்' தோன்றியிருக்கா விட்டால் மக்கள் வீதிக்கு இறங்கியி ருக்கவும் மாட்டார்கள், அவர்கள் பெயரால் எழுச்சிப் போராட்டம் என்று ஒன்று தோன்றியிருக்கவும் மாட்டாது என்பதை மறுக்க முடி யாது. அது தற்காலிகப் பிரச்சினை. தமது பிரச்சினைகள் தீர்ந்து விட் டால் மக்கள் தம் பாட்டில் தமது வேலைகளைச் செய்யச் சென்றுவி டுவார்கள். எனவே இதில் அரசிய லைப் புகுத்தி சிக்கலாக்கா மல், தமிழ் தரப்பு நிதானமாகவும் அமை தியாகவும் அனைத்தையும் அவ தானத்துடன் கையாள வேண்டும் என்றும் எல்லைமீறிப் போகின்ற போது அரசியல்வாதிகள் அமைச் சரவையிலும் போராட்டக்காரர்கள் சிறையிலும் இருப்பார்கள் என்றும் அப்போதே நான் எச்சரித்திருந் தேன். ஆயினும் குறை மதிப்பீ டுள்ள எமது தமிழ் அரசியல்வாதி கள் சிலர் இந்தப் போராட்டத்துக்கு தமிழர் பெயரால் அரசியல் முகவரி வழங்கியபோது அதனையும் நான் கண்டித்தேன். ஏனெனில் இது எங் குபோய் முடியும் என்பதை தீர்க்க மான பார்வையுள்ள எவரும் மிக எளிதாக விளங்கிக் கொள்வர்.

ஒருகட்டத்தில் அமைதியான மக் கள் எழுச்சிப் போராட்டமான 'அர கலய' மீது வன்முறை திணிக்கப்பட்ட போது அந்த வன்முறையை மக் கள் எழுச்சிப் போராட்டத்தின் பெய ரால் பல பிரதேசங்களிலும் வன்மு றையால் எதிர்கொண்டு பதில் அளித்தபோதே நிலைமை சிக்க லாகி விட்டது என்பதை விளங்கிக் கொள்ள முடியுமாக இருந்தது. பலநூறு வாகனங்கள் எரிக்கப்பட் டன, எழுபதுக்கும் மேற்பட்ட வீடு கள் தீக்கிரையாகின, மக்களில் சிலர் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். மக்களின் வெற்றி யாகத்தென்பட்ட வன்முறை அரசி யல், வாய்ப்பின்றி ஓரங்கட்டப்பட்ட வராகக் கணிக்கப்பட்ட ரணில் விக்கிரம சிங்கவை ஆறாவது முறை பிரதமராக்கி பின்னர் பதில் ஜனாதிபதியாக்கி பின்னர் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனா திபதியாக ஆட்சிப் பீடமேற்றியதைத் தவிரவேறு எதனையும் சாதிக்க வில்லை.

வீதியில் திரண்டெழுந்த மக்கள் பலர் வீடுகளில் அடங்கிப்போக போராட்டக்காரர்கள் அவசரகால மற்றும் பயங்கரவாதத் தடைச்சட் டத்தின் கீழ் கைதாகி சிறைக்குச் செல்ல அரசியல்வாதிகள் மெது மெதுவாக அமைச்சர்களாகினர். இதை ஒரு மக்கள் வெற்றி என்றோ எழுச்சியென்றோ எப்படி அடையா ளப்படுத்துவது?

வன்முறைகள்தான் மக்கள் எழுச் சிப் போராட்டத்தின் வெற்றியா? ஜனநாயகத்தை ஆதரிப்போர் சட்டத்தின் மீது நம்பிக்கை கொண் டிருப்போர் நிச்சயம் இத்தகு வன் மத்தை ஆதரிக்கமுடியாது அப்படி யிருக்க இங்கு எதை வெற்றியென் பது? நலிந்துபோயிருந்த நாட்டின் பொருளாதாரத்தை வன்முறை இன்னும் ஆழமான பள்ளத்தில் தள்ளிவிட்டது என்பதே உண்மை - என்றுள்ளது. (ம)

# வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 23

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட் டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட் சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

அதற்கமைய https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற தன்னியக்க தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்யுமாறு அறிவித்துள்ளனர்.

அதன்பின்னர் தங்கள் அலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்படும் குறுந்தகவலுடன், புதிதாக வாகனங் களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற் றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங் களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றை யும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளனர். (ஓ-14)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் புதிய வலைப்பந்தாட்ட மைதானம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வலைப்பந்தாட்ட மைதானம் கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டு, நாடு முழுவதும் அனைத் துக் கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய 100 பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவி ருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் இந்த மைதானம் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதன், பாடசாலை அதிபர், பாடசாலை யின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர். (ஓ-14-20)

# அனுமதிப் பத்திரமின்றி சுண்ணாம்புக்கல் அகழ்வு

## சாரதி கைது

யாழ்ப்பாணம், டிசெ. 23

வளலாய் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சுண்ணாம்புக்கல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் டிப்பர் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது அச்சு வேலி பொலிஸார் குறித்த டிப்பரை மறித்து சோத னையிட்டனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சுண்ணாம்புக் கல் ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து டிப்பர் சாரதி கைதுசெய்யப்பட்டு டன் டிப்பரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என அச்சுவேலி பொலி ஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை சட்டநடவடிக் கைக்குட்படுத்த அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)

# பாலி பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் நிறுத்தம்!

கொழும்பு, டிசெ.23

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத் தின் கல்வி, நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் வரை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

மகாநாயக்க தேரர்களால் திருத்தங்கள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்படும்வரை இந்தப் பல் கலைக்கழக செயற்பாடுகளை மீள ஆரம்பிக்காமலி ருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்ச ரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

ஹோமாகமையில் அமைந்துள்ள பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான நிலைமை தொடர்பிலும், பகிடிவதை கள் மற்றும் அவற்றால் ஏற்பட்டுள்ள வன்முறை கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பிரதேசசபைகளின் மதிப்பீடு

# வடக்கு மாகாணத்தில் வலி.வடக்கு முதலிடம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

பிரதேசசபைகளின் செயற்பாடுகளுக்கான மதிப்பீட்டுப் புள்ளியிடலில் வடக்கு மாகா ணத்தில் வலி.வடக்கு பிரதேசசபை முதலி டத்தைப் பெற்றுள்ளது.

உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சுயாதீன குழுக்களால் வடக்கு மாகா ணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இந்த ஆண்டுக்கான மதிப் பீட்டு புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டது. இதில் வலி. வடக்கு பிரதேசசபை 786.18 புள்ளிகளைப் பெற்று வடக்கு மாகாணத் தில் முதலிடத்தைப் பெற்றதுடன் செயற் திறன் கொடையாக ரூபா 35 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டையும் பெற்றுள்ளது. (ச-125)

50 ஆவது **பிறந்தநாள் வாழ்த்து**

**பொன்விழாக்காணும்** எங்கள்

**தென்னைப் பயிர்ச் செய்கை பிராந்திய முகாமையாளர்**

## திரு. தே. வைகுந்தன்




அவர்களை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**கமக்காரர் சங்கம், கிளாலி.**



## இந்தியத்துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்

# காணி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்திய துணைத் தூதரகத்திற்கான அலுவலக கட்டத்தை அமைப்பதற்காக மற்றும் உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்பு களை நிர்மாணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் பொருத்தமான காணியை எதிர் பார்கின்றது. காணிக்கான குறைந்த பட்ச நில அளவானது 1 ஏக்கர் (16 பரப்பு 160 பேர்ச்) ஆகும். காணியானது பிரதான சாலையில் முகப்பை கொண்டதாக இருக்க வேண்டும் மற்றும் காணி தொடர்பில் எந்த விதமான பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் அற்ற தனிப்பட்ட சொத்தாக இருக்க வேண்டும். ஆர்வ முள்ள தரப்பினர் அல்லது தனிநபர் தங்கள் முன்மொழிவை காணி தொடர்பான முழு விபரங்களுடன் எதிர்பார்க்கும் விலையுடன் பின்வரும் முகவரிக்கு பாது காப்பாக மூடப்பட்ட உறையில் அனுப்பவும்.

**தலைமை நிர்வாக அதிகாரி**
**இந்தியத்துணைத் தூதரகம்**
**இல. 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கம் : + 94 21 222 0504 & 222 0505**
**மின்னஞ்சல் முகவரி : hoc.jaffna@mea.gov.in**

(N 18418)(3/6)



SLTMOBITEL
The Connection

## SRI LANKA TELECOM TENDER NOTICE

### 2023 ஆம் ஆண்டிற்கான எஸ் எல் டி இன் வியாபார சேவைகளை விற்பனை செய்ய புதிய விற்பனை முகவர்களை பதிவுசெய்தல்

SLT இனால் 2023ஆம் ஆண்டிற்கான எஸ் எல் டி இன் வியாபார சேவைகளை விற்பனை செய்ய புதிய விற்பனை முகவர்களை பதிவு செய்ய தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் விற்பனை முகவர்கள், தேவைக்கேற்ப, SLT இன் பொருட்கள் மற்றும் வியாபார சேவைகளை ஊக்குவிக்கவும் விற்பனை செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள்.

வருங்கால விற்பனை முகவர்கள் தம் நிறுவனத்தின் வளம் மற்றும் நிறுவனத்தின் ஏனைய திறன்களை பொறுத்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த பதிவு ஒரு வருட காலத்திற்கு உரியதாகும்.

SLT இன் தேவைகள் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வருங்கால விற்பனை முகவர்களிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுடன் விற்பனை முகவர் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

விண்ணப்ப படிவம் மற்றும் மேலும் விவரங்களுக்கு ரூ.1,000/- மீள்செலுத்தா வைப்பை செலுத்தி SLT இன் கொள்முதல் பிரிவில் இருந்து பெறலாம்.

விண்ணப்பத்தையும் திட்டறிக்கையையும் 2023.01.15 ம் தேதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன் பதிவு தபால் அல்லது கூரியர் (courier) மூலம் SLT கொள்முதல் பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

For further details, please contact 011 309 0654, 011 2 300 653

**பொது முகாமையாளர் - கொள்முதல்**
**கொள்முதல் பிரிவு,**
**09 வது மாடி, கட்டிடம் A,**
**ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சி,**
**லோட்டஸ் வீதி, கொழும்பு - 01**


# ஒளிவிழா!



யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் ஒளி விழா பாடசாலையின் யோகர் சுவாமி மண்டபத்தில் நேற் றுக் காலை பாடசா லையின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட் டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்து வக் கல்லூரி விரி வுரையாளர் அருட் பணி தே.ரவிராஜ் பிரதம விருந்தின ராக கலந்துகொண் டார். நிகழ்வில், பாட சாலை அதிபர் க.தவ கீஸ்வரன், ஆசிரியர் கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர். (ம-20)


## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை துரைரத்தினம்



அவர்கள் கடந்த (21.12.2022) அன்று இறைபத மடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**ந.சண்முகநாதன்**
**விநாயகர் களஞ்சியம்**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீட இந்து நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் **திரு. சின்னராசா ரமணராஜா** அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் க. சின்னராசா

அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பீடாதிபதி, துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் இந்துக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(CS22402) (3/6)



## கண்ணீர் அஞ்சலி



எனது தந்தையின் ஆருயிர் நண்பனும்
எனது மதிப்புமிக்க ஆசானுமான

### கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

அவர்கள் 21.12.2022 புதன்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும். குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**S. மணிவர்ணன்**
**வாணி ரெக்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**

**செல்வராசா குடும்பம்**
**கென்ஸ்மன் லேன்,**
**சாவகச்சேரி.**

(CR 38828) (3/6)


## சமூக பாதுகாப்புத்திட்ட கொடுப்பனவு வழங்கல்

தென்மராட்சிப் பிர தேச சமுர்த்தி அல கின் சமூக பாது காப்பு திட்டத்தில் இணைந்தவர்க ளுக்கான கொடுப் பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிக ளில் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் திட் டத்தின் பிரகாரம் பிறப்பு, இறப்பு, திரு மணம், சிகிச்சை, மாணவர்களுக் கான சிப்தொற போன்ற கொடுப் பனவுகள் வழங் கப்படுகின்றன எனவும் கொடுப் பனவுகளை எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளு மாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

(ஓ-14-9)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- **இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020**
- **மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020**

மேற்படி பரீட்சைகளினை 07.01.2023 (சனிக்கிழமை) தொடக்கம் 22.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 02.01.2023 (திங்கட்கிழமை) தொடக்கம் 05.01.2023 (வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை **www.codl.jfn.ac.lk** என்ற இணையத்தளமுகவரியி னூடாகவோ அல்லது 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**22.12.2022** **பதிவாளர்**

(CR 38831) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22.07.1948 | உதிர்வு 23.12.2011

## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(உரிமையாளர் – விநாயகர் ரேனிங் வேக்ஸ்)

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடிந்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் (2திமோ 4:7)

அப்பா !

நீங்கள் எமைப் பிரிந்து பதினொரு வருடங்கள் ஆனதே!
எமக்காக எல்லாம் செய்த உங்களின்
அன்புக்காகவும் அரவணைப்பிற்காகவும் ஏங்குகின்றோம்
நிதமும் படைத்த மாபரன்
உங்களுக்குத் தனது அமைதியில் இளைப்பாறுதலையும்
எமக்குத் தேறுதலையும் அருள்வாராக

என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

(CS 22347) (3/6)

ஓம் வீராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 25.11.2022 அன்று துவிதியை திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி தாவளை இயற்றாலை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் கணேசலிங்கம் தங்கராணி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (23.12.2022) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையில் நடைபெறும், தொடர்ந்து எதிர்வரும் (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

(CS 22333 ) (3/6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 02 - 12 - 1937



உதிர்வு 22 - 12 - 2022

## திருமதி றீற்றா வில்விறட்

யாழ்ப்பாணம் 848 /01, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றீற்றா வில்விறட் அவர்கள் நேற்று (22.12.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வில்விறட்டின் பட்சமுள்ள மனைவியும், ஜசிந்தாமாளின் (பிரான்ஸ்), மேரிஅனா (பபி), கிறிஸ்ரி (பிரான்ஸ்), மரியகிளியோபட்றா (கலா, யாழ். மறைக் கல்வி நடுநிலையம் திருவழிபாட்டு ஆணையகம்) லூட்ஸ்றீசா ஷகிலா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஹென்றி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அலன்ராஜ், ஜெனிற்றா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அலன் வெரோனிக், பிரவீனா, மேஷாக், திரிஷாந், மார்க்கஸ், பிரிதிஷாந், மெர்சி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், தங்கராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிறிற்றோ (ஆங்கில ஆசிரியர்), சாரதா, சுசிலா, மேனகா, சகுந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.12.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


848/01, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 22326) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்
077 905 0221

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1958



மறைவு 22 . 12 . 2022

## கிருஸ்ணசாமி பரமசிவம்

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் இல.54, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி பரமசிவம் அவர்கள் நேற்று (22.12.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சசிகலாவின் அன்புக் கணவரும், ஜெயக்கிருஸ்ணா, ஜெயக்குமார், சிந்துஜா, கிருஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசுந்தரத்தின் அன்பு மருமகனும், அமரர் பாலசுந்தரம், செல்வலோகநாயகி, யோகாம்பிகை, அமரர்கள் கிருஷ்ணகுமாரி, கெங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கல்பனா, நிரோசாந் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் .

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22405) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
18.08.1974

இறப்பு
22.12.2022

## திரு. கந்தசாமி ஜெகநாதன் (நாதன்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தசாமி ஜெகநாதன் (நாதன்) அவர்கள் நேற்று (22.12.2022) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் கந்தசாமி - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், தியாகராசா - பகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானசசி (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், சதுசிகா, சந்தோஸ், தருமீகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகோபால், பற்குணசீலன், ரஜேஸ்வரன், ஜெகதீஸ்வரன், ரவீந்திரன், தனுசா (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானகௌரி (சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), ஞானசீலி (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்
விஜிதா அரிசி ஆலை

(CS 22338) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
27
05
1947

மறைவு
21
12
2022

## சொக்கலிங்கம் மனோன்மணி

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், D8, உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் மனோன்மணி கடந்த (21.12.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும், அமரர் மோகன் மற்றும் ராசன் (ஜேர்மனி), சுமதி, ரமா, சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2022) வெள்ளிக் கிழமை இல.45, D8, உருத்திரபுரம் எனும் முகவரியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் .

தகவல்:
குடும்பத்தினர்.

சுமதி - 077 864 4441
ரமா - 077 1996 110

(CR 38888) 1/6

# ஈர விழிகளுடன் ஈராண்டில்...



பார்போற்ற
01
12
1945

பார் ஏங்க
13
01
2021

## அமரர் சின்னத்துரை குமரவேல் (JP)

(ஓய்வுபெற்ற நூலகர், பொது நூலகம், சுன்னாகம்,
முன்னாள் தலைவர் - பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்,
விவாகப் பதிவாளர் - வலிகாமம் வ... பிரிவு)


திதி:- அமாவாசை (23.12 ...22)

எம் வீட்டின் மகா விருட்சம்
சாய்ந்து ச...னதுவே
எம் வீடும் ...றிச்சதுவே
வெற்றிடமா... ஆனதுவே!
கூடி வாழ்... நாட்கள் - எம
மனக்கண்... தோன்றுதப...
ஈர விழிகளுடன் ஈராண்டில் ந...
ஓம் சாந்தி ! சாந்தி !! ... !!!

"திருவேரகம்",
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

... த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தால் நடத்தப்பட்ட ஆரம் பப் பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்ட சித்திரப் போட் டியில் யாழ்ப்பாணம் சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கல வன் பாடசாலை தரம் 4 மாண வரான சுதன் அஸ்விதன் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். (ச)

## யாழ்.மாநகரசபையால் புத்தகங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.மாநகரசபையின் பொது நூலகத் தில் மேலதிகமாக காணப்படும் புதிய புத்தகங்களை வடமாகாண ரீதியில் நூல கங்களுக்கு வழங்கும் நிகழ்வு, யாழ். மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. யாழ்.மாநகரசபை பொது நூலகத்தில் காணப்படும் மேலதிகமான புதிய புத்த கங்களை ஏனைய நூலகங்களின் பயன் பாட்டுக்கு வழங்குவது தொடர்பிலான பிரேரணை ஒன்று யாழ்.மாநகரசபை முதல்வரால் முன்மொழியப்பட்டு அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந் தது.

அந்த செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக 17 பாடசாலை நூலகங்கள் மற்றும் 14 பிரதேச சபைக்குரிய 31 நூலகங்களுக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ண னால் வழங்கப்பட்டன.

இதன்போது எதிர்வரும் காலங்களிலும் புத்தகங்கள் தேவைப்படும் நூலகங்கள் அதற்கான கோரிக்கை கடிதங்களை மாந கரசபைக்கு வழங்கும் பட்சத்தில் அந்த நூலகங்களுக்கும் புத்தகங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் உறுதியளித்தார். (ஓ-14-27)


**பணிப்பெண் தேவை**

கிளிநொச்சியில் தங்கிநின்று சமையல் வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. வயது:(40-50) 071 72 300 60

**வேலையாட்கள் தேவை**

மீன் தொட்டிகள், பூங்கன்றுகள் விற்பனை செய்யும் கடையொன்றுக்கு வேலையாட்கள் தேவை. 071 72 300 60

**விற்பனைக்கு**

பொங்கல் அகப்பைகள்
திருவு பலகைகள்
விளக்குமாறு
இரு பலகை, மீன் கத்தி

தைப்பொங்கலை முன்னிட்டு வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவில் சில்லறை யாகவும் மொத்த மாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ்ப்பாணம் : 077 210 5286,
கிளிநொச்சி : 077 559 1778

(CS 22342)(3/6)

**மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை**

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 077 706 7698

(CR 38810)(3/6)

**50ஆவது பிறந்த நாள் வாழ்த்து**

**திரு.தேவராஜா வைகுந்தன்**

(பிராந்திய முகாமையாளர், தென்னை பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்.)



நல்ல சுகத்தோடும்
நீண்ட ஆயுளோடும்
புன்னகை நிறைந்த முகத்தோடும்
மனம் நிறைந்த மகிழ்ச்சியோடும்
எப்போதும் இன்பமாய் இருக்க
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கொடிகாமம் வலய
கற்பகதரு சங்கங்கள்.

**பிறந்த நாள் வாழ்த்துக்கள்**



தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர்
**திரு. தேவராஜா வைகுந்தன்**
அவர்களின் 50 ஆவது இன்று (23.12.2022) பிறந்த நாள் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழ்த்துவோர்:
சாவகச்சேரி நகர் கப்றுக்க சங்கம்

(CR 38825)(3/6)

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

**பிரிவு-44**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Sinhalam
- Diploma in Psychology & Counseling
- Diploma in Nursing
- Diploma in Caregiver IELTS Life Skills A1 / B1
- School Based English/ICT (Grade 6-A/L)

Diploma → HND → Degree

ஆரம்பம் : 24.12.2022 10.00 AM

ஏன் நீங்கள் IPS உடன் இணையவேண்டும்?

குறுகிய காலம் (3மாதங்கள்)
சான்றிதழ் அச்சடித்த பாடக்குறிப்புகள்

IPS to your future
T.P. 021 4240229 / 076 685 2629

**மாபெரும் மலிவு விற்பனை**

ஏசியன் தளபாட நிலையத்தில்
இன்று முதல் மாபெரும் மலிவு விற்பனை.
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம்)
077 358 3879, 076 821 9416

**50ஆவது பிறந்த நாள் வாழ்த்து**

**திரு.தேவராஜா வைகுந்தன்**

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்
தென்னை பயிர்ச்செய்கை சபை)



நீண்ட ஆயுளோடும்
நல்ல சுகத்தோடும்
மனம் நிறைந்த மகிழ்ச்சியோடும்
எப்போதும் இன்பமாய் இருக்க
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வரணி வலய
கற்பகதரு சங்கங்கள்.

**50ஆவது அகவை நாள் வாழ்த்துக்கள்**

23.12.2022 **தேவராஜா வைகுந்தன்**

50th Birthday

(பிராந்திய முகாமையாளர் தென்னை பயிர்ச்செய்கை சபை வடமாகாணம்.)





வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலம் இல்லாத இதயம்
வெறுப்பைக்காட்டாத முகம்
கொண்டவரே
வாழ்த்துக்கள் பலகோடி.....

வாழ்த்துவோர்.....
முழுங்காவில்
கற்பகதரு சங்கம்

**50ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

**திரு. தேவராஜா வைகுந்தன்**



(பிராந்திய முகாமையாளர் யாழ்ப்பாண பிராந்தியக் காரியாலயம் தென்னை பயிர்ச்செய்கை சபை.)

இன்று 50ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் எமது பிராந்திய முகாமையாளரை அன்போடு வாழ்த்துவதோடு மேலும் பதவி உயர்வுகள் பெற்று உடல், உள நலத்துடன் சிறப்புடன் வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.....................
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாண பிராந்தியக் காரியாலயம்,
தென்னை பயிர்ச்செய்கைச் சபை,
பளை-கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை: 5,000 மாணவர்கள் சிறையில்

கொழும்பு, டிசெ. 23
உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த 5 ஆயிரம் மாணவர்கள் போதைப்பொருள் பாவனையுடனான குற்றச்சாட்டுக்களின் கீழ் சிறைச்சாலைகளில் உள்ளார்கள் - என்று மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜெனரல் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2021ஆம் ஆண்டு சமூக மட்டத்தில் ஹெரோய்ன் பாவனை குறைவடைந்து ஐஸ் ரக போதைப்பொருள் பாவனை சடுதியாக உயர்வடைந்துள்ளது. ஹெரோய்ன் போதைப்பொருளை காட்டிலும் ஐஸ் போதைப்பொருளின் விலை குறைவாக உள்ளதுடன், எமது நாட்டில் ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான சட்டம் கடந்த காலங்களில் இல்லாத காரணத்தினால் ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டு பாடசாலைக் கல்வியைத் தொடராத 600 பேர் பேதைப்பொருள் பாவனையுடனான குற்றச் செயல்களுடன் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். இந்த எண்ணிக்கை 2021ஆம் ஆண்டு 190ஆகக் குறைவடைந்தது, கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது படித்த இளம் தலைமுறையினர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களினால் கைது செய்யப்பட்டு தண்டனைக்குள்ளாவது அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டு உயர்தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சைகளில் சித்தியடைந்த 2 ஆயிரம் பேர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். இந்தத் தொகை கடந்த ஆண்டு 5 ஆயிரமாக உயர்வடைந்துள்ளது - என்றார். (அ-ம)

## கோத்தாபய...

விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட பண்ட வரி 25 சதமாகக் குறைக்கப்பட்டது. இது குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நிதி அமைச்சின் அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியபோது, அப்போதைய ஜனாதிபதி கோத்தாபயவின் ஆலோசனைக்கமைய வரிக்குறைப்பு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையிலேயே கோத்தாபயவிடம் விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த வரிக்குறைப்பு அப்போதைய வர்த்தகத்துறை அமைச்சரான தனக்கே தெரியாமல் செய்யப்பட்டது எனவும், அரச அதிகாரிகள் சிலர் அது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தனர் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தொல்பொருள்...

ஜனாதிபதி செயலகம் வழங்கிய பதிலில் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த செயலணியை 2020 ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நியமித்தார். அப்போதே இந்த நடவடிக்கைக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையான வாழும் கிழக்கு மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட அந்தச் செயலணியில், சிங்களவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டமையே, அந்த எதிர்ப்புக்கு பிரதான காரணமாக அமைந்தது. இதையடுத்து, அந்தச் செயலணியில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் உறுப்பினர்களாகப் பின்னர் சேர்க்கப்பட்டனர்.

'தொல்பொருள் உள்ள இடங்கள்' எனத் தெரிவித்து, சிறுபான்மை மக்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதாக தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வருகின்றமையின் காரணமாக, கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியை தேவையற்ற ஒன்றாகவே சிறுபான்மை மக்கள் கருதினர்.

இந்த நிலையிலேயே கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதி, மேற்படி செயலணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலைத்துள்ளார் என்று தனது விண்ணப்பத்துக்கு வழங்கப்பட்டுள்ள பதிலில், ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது என்று குறித்த ஊடகவியலாளர் வெளிப்படுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியை ரணில் விக்கிரமசிங்க கலைத்துள்ள நிலையில், அதற்கென வழங்கப்பட்ட கடமைகள் அனைத்தும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. (அ-ம-22)

## காணாமற்போன...

தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, குறித்த மீனவர் மீன்பிடிக்கச் சென்ற படகு கடலில் கவிழ்ந்த நிலையில் அவதானிக்கப்பட்டது. எனினும், மீனவரைக் காணவில்லை. இதையடுத்து அவரைத் தேடும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. இந்த நிலையிலேயே மேற்படி நபர் நேற்று மாதகல் கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேலதிக நடவடிக்கைகளையும் விசாரணைகளையும் இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-27)

## சிக்கியது...

வைக்கப்பட்ட பொறியிலேயே சிறுத்தை சிக்கியுள்ளது. இதையடுத்து இது தொடர்பில் கிராம அலுவலர் ஊடாக வன உயிரிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு குறித்த சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது. சிறுத்தை காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதால் மருத்துவக் குழுவின் கண்காணிப்பில் தற்போது அது வைக்கப்பட்டுள்ளது. (அ-ம 113)

## இனப்பிரச்சினைக்குத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பேசி அரசியல் தீர்வை விரைந்துகாணத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், அது கைகூடவில்லை. தமிழ்க் கட்சிகளும் என் மீது நம்பிக்கை வைக்கவில்லை. பழையதைப் பேசுவது இப்போது உகந்ததல்ல. அனைவரும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். அதனால்தான் அவரை நான் பிரதமராக நியமித்தேன். ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியவுடன் அவரை நாடாளுமன்றம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் என்று நினைத்தேன். நான் நினைத்த மாதிரி அது நடந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சிகளுடன் பேசி அரசியல் தீர்வைக் காண்பார் என்று நம்புகின்றேன். அது நடந்தால் நாட்டுக்கு நல்லது, மக்களுக்கும் நல்லது.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் கட்சிகள் முரண்பட்டு நிற்காமல் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அவரின் கருத்து நியாயமான கருத்து. எனவே, கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்' - என்றார். (அ-ம-22)

## மனநலக்...

ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், தற்கொலைக்கு முயற்சிப்பவர்களை வழிப்படுத்தல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் குறித்த திட்டங்களை கவனிப்பதற்காக, மனநல மேம்பாட்டு பிரிவின் இணைப்பாளராக மருத்துவக் கலாநிதி த.குகதாசன் வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

## யாழ். இளைஞன்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தூக்கிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இளைஞர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-ம)

## போலி...

விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவரால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட செய்தியறிக்கையில் உள்ளதாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் அரச கால்நடை மருத்துவர் என்ற போர்வையில் போலியான நபர்கள் கால்நடைகளுக்கும் வீட்டுப்பிராணிகளுக்கும் சிகிச்சையளித்து பெருமளவு நிதியைச் சூறையாடி வருகின்றனர்.

இவர்களால் மேற்கொள்ளப்படும் தவறான சிகிச்சைகளால் கால்நடைகள் பல பெருமளவில் உயிரிழந்துள்ளன. இவற்றில் பெறுமதிமிக்க கால்நடைகளும் உள்ளடங்குகின்றன. வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கும், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கும் இதுதொடர்பில் அந்தந்த மாவட்டங்களின் பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகளால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆகவே போலி கால்நடை மருத்துவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாகவும் எச்சரிக்கையுடனும் செயற்படவேண்டும். குறித்த போலி மருத்துவர்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்டோர் அவர்கள் தொடர்பான விவரங்களை உடனடியாக விவசாய அமைச்சுக்கு அறிவிக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-ச)

## டிசெம்பர்...

நேற்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

## அனைத்து...

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம், நேற்றுமுன்தினம் இரவு தேசிய தேர்தல் ஆணைக்குழு இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 4(1)ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## மீனவரின்...

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத்தின் உறுப்புரிமை பெற்ற மீனவர் ஒருவரே இவ்வாறு மிரட்டப்பட்டுள்ளார். கருவாட்டு உற்பத்தியில் ஈடுபட்ட மீனவரின் கழுத்தில், அங்கு வருகைதந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி கத்திவைத்து மிரட்டியுள்ளார். இதையடுத்து அச்சமடைந்த மீனவர், உடனடியாக அன்றைய தொழிலைக் கைவிட்டு கடற்றொழில் சங்கத்திடம் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பில் சங்கத் தலைவர் தெரிவித்ததாவது:-

இந்தச் சம்பவம் தொடர்பில் என்னிடம் முறையிடப்பட்டுள்ளது. இதையடுத்து காரைநகர் இராணுவ முகாமில் கடமையாற்றும் புலனாய்வாளர் ஒருவர் எனக்கு அழைப்பையெடுத்து,தான் விளையாட்டாகச் செய்ததாகவும் பொலிஸில் முறையிடவேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார். இராணுவத்தினரின் இந்தச் செயலை ஏற்றுக்கொள்ளமுடியாது. இராணுவத்தின் இந்த நடவடிக்கையானது குறித்த பகுதியில் இரவு - பகல் பாராது உழைத்துக்கொண்டிருக்கும் மீனவர்களிடத்தில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடொன்றின் மீது நேற்று தாக்குதல்

## அச்சுவேலியில் சம்பவம்



யாழ்.டிசெ. 23

யாழ்ப்பாணம் - அச்சுவேலிப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீதும் இதர உடைமைகள் மீதும் நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் வீட்டின் சி.சி.ரி.வி கமெராக்கள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், வீட்டின் முன்னாள் நிறுத்த வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல் தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-27)


## வேலையாட்கள் தேவை

மோட்டார் வைண்டிங், வாசிங் மெசின், காஸ் குக்கர், கிரைண்டர் திருத்தும் கடைக்கு, ஆட்கள் தேவை. யாழ்ப்பாணத்தில் இருந்து 6 KM எல்லைக்குட்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும். பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

071 879 7721

## வீடு வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து நடை தூரத்தில் இரண்டு வீடுகள் (Apartment) வாடகைக்கு Ground Floor, 1st Floor
3Bedrooms, 2Bathrooms, Hall,
Kitchen Seperate Entrance,
Two Car Parking

077 770 8125, +16478220973

(CS 22340)(3/6)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப்பிரிவு

A/L 2022 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

### இலவச கருத்தரங்கு

29, 30 December 2022 - தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
30 ,31 December 2022 - பொறியியல் தொழில்நுட்பம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்.
காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5 ஆவது முறையாகவும்
98 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
077 017 5346

(CR 38830)(3/6)

## உடனடி வேலை வாய்ப்பு

Photo copy, Computer Typing மற்றும் Printing வேலைகளில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. (அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.



Pirakanth Photo copy Center
55, Palaly Road, Thirunelvely, Jaffna.
074 353 8881

(CS 22306)(3/6)

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகை வியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**கணக்காளர் (ஆண்) :** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**விற்பனை உதவியாளர் (ஆண்)**

சுயவிபரக்கோவையுடன் நாளை (24.12.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் நேரில் வரவும்

(CR 38802)(3/6)

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல.30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 82 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம்**

077 98 65 457
077 81 47 389

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.


தொடர்பு:- **ஜெயம்**

077 8147 389
077 9865 457


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 09 . 03 . 1951

விண்ணில் 23 . 11 . 2022



### அமரர் கந்தையா தர்மலிங்கம்

(உரிமையாளர், நியூ குறிஞ்சி பார்மசி, திருநெல்வேலி.)

திதி: கார்த்திகை அமாவாசை

பார்போற்ற வாழ்ந்த பண்பாளரே!
சீர்பெற்று உயர்ந்த எம் செம்மலே!
நேர்கொண்ட வாழ்க்கைநெறி நின்றவரே!
கார்குழலாள் அன்பிற்கிடமாய் வாழ்ந்தவரே!
பண்ணிய புண்ணியத்தால் பரமனடி நாடி
விண்ணுலகை நண்ணி விரைந்தீரோ - உமது
நினைவு நீங்காது நித்தமும் வாட்டிட
நெஞ்சம் புண்ணாகி வருந்துகின்றோம் - ஐயா!
எம்உயிர் இருக்கும் வரை உமை மறவோம் - உமது
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், ஆதரவுக் கரம் நீட்டியோருக்கும் எமது நன்றிகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

நீங்காத நினைவுகளுடன்...
மனைவி மற்றும் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.